### "ஒரே நாடு ஒரே தேர்தல்" மசோதா - தேர்தல் விதிகளில் திருத்தம் என்பன போன்றவை

# ஒட்டுமொத்த இந்தியாவையும் சூடாக்கியிருக்கிறதென்றால் அது மிகையல்ல!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, டிச. 25-

"ஒரே நாடு ஒரே தேர்தல்" மசோதா - தேர்தல் விதிகளில் திருத்தம் என்பன போன்றவை ஒட்டுமொத்த இந்தியாவையும் சூடாக்கி யிருக்கிறதென்றால் அது மிகையல்ல என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம் செய்துள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய அரசு கடந்த 20ம் தேதி, தேர்தல் விதிகளில் ஒரு முக்கிய திருத்தத்தை மேற்கொண்டது. அதாவது, பொதுமக்கள் தேர்தல் தொடர்பாக எழும் சில சந்தேகங்களை, தேர்தல் ஆணையம், நீதிமன்றம் அல்லது ஆர்.டி.ஐ. மூலமாக இதுவரை கேட்டுப் பெறலாம். அவ்வாறு கேட்கப்படும் ஆவணங்களும் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கு செக் வைக்கும் வகையில், ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகள் 1961 - விதி 93ல் சில திருத்தங்களை மேற்கொண்டது.



தினகரன்

டிசம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை

தேர்தல் விதி 'மீறல்'

ஒன்றிய அரசு கடந்த 20ம் தேதி, தேர்தல் விதிகளில் ஒரு முக்கிய திருத்தத்தை மேற்கொண்டது. அதாவது, பொதுமக்கள் தேர்தல் தொடர்பாக எழும் சில சந்தேகங்களை, தேர்தல் ஆணையம், நீதிமன்றம் அல்லது ஆர்டிஐ மூலமாக இதுவரை கேட்டுப் பெறலாம். அவ்வாறு கேட்கப்படும் ஆவணங்களும் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கு செக் வைக்கும் வகையில், ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகள் 1961 - விதி 93ல் சில திருத்தங்களை மேற்கொண்டது.

முன்னதாக தேர்தல் நடத்தை விதி 93 (2) (ஏ)ன் படி, தேர்தல் தொடர்பான மின்னணு ஆவணங்கள் உள்பட அனைத்து ஆவணங்களும் பொது ஆய்வுக்கு கிடைக்கும் என இருந்தது. திருத்திய விதிகளின்படி, அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் பெற முடியாது. வேட்புமனுக்கள், நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள், தேர்தல் முடிவுகள், செலவு கணக்குகள் போன்றவற்றை மட்

முன்னதாக தேர்தல் நடத்தை விதி 93 (2) (ஏ)ன் படி, தேர்தல் தொடர்பான மின்னணு ஆவணங்கள் உள்பட அனைத்து ஆவணங்களும் பொது ஆய்வுக்கு கிடைக்கும் என இருந்தது. திருத்திய விதிகளின்படி, அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் பெற முடியாது. வேட்புமனுக்கள், நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள், தேர்தல் முடிவுகள், செலவு கணக்குகள் போன்றவற்றை மட்டுமே பெற முடியும். சி.சி.டி.வி. உள்ளிட்ட மின்னணு ஆவணங்களை யாரும் கேட்டுப் பெற முடியாது.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவின்போது, மாலை 5 மணிக்கு பதிவாகி இருந்த வாக்கு எண்ணிக்கையை விட, இரவு 75 லட்சம் வாக்குகள் கூடுதலாக அறிவிக்கப்பட்டன. பொதுவாக, தேர்தல் வாக்குப்பதிவு முடிந்தும் வாக்காளர்கள் வரிசையில் நின்றால், அனுமதி சீட்டு முறையில்தான் வாக்களிக்க முடியும். இதன்படி சுமார் 100 பேர் மட்டுமே வாக்களிக்க முடியும். ஆனால், அதிரடியாக 75 லட்சம் வாக்குகள் அதிகமானது பெருங்குழப்பத்தையும், தேர்தல் நியாயமான முறையில் நடந்துள்ளதா என்ற சந்தேகத்தையும் கிளப்பியதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

இதுதொடர்பாக வழக்கு தொடரப்பட்ட நிலையில், அரியானா சட்டமன்ற தேர்தலில் பா.ஜ. வென்ற வாக்குச்சாவடியில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகள், வாக்குப்பதிவு ஆவணங்களை கோரி, பிரபல வழக்கறிஞர் மெகமூத் பிரச்சா என்பவர், பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். நீதிமன்றம் மேற்கண்ட ஆவணங்களின் நகல்களை வழங்கும்படி தேர்தல் ஆணை யத்துக்கு உத்தரவிட்டிருந்தது. தொடர்ச்சியாக மாநில சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் முறைகேடு நிகழ்ந்ததாக கூறி உயர்நீதி மன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

இதன்காரணமாகவே, விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. ஆனால், நீதிமன்ற வழக்கு ஒன்றின் அடிப்படையிலேயே இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளன. ஆனால், என்ன வழக்கு, ஏனிந்த மாற்றம் என உரிய முறையில் விளக்கவில்லை. மின்னணு ஆவணங்களை பொதுமக்கள் பெறுவதை தடுக்கும் வகையிலேயே, தேர்தல் விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இது இந்திய தேர்தல் ஆணையத்தின் ஒருமைப்பாட்டை அழிக்கும் பா.ஜ. அரசின் திட்டமிட்ட சதி என் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார். நாட்டில் சுதந்திரமான - நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதன் மீது தொடுக்கப்பட்டுள்ள மக்களாட்சிக்கு விரோதமான தாக்குதல் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தேர்தல் விதி திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பல்வேறு எதிர்க்கட்சிகளும் இந்த திருத்தத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தாக்கல், தேர்தல் விதிகளில் திருத்தம் என நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நடந்த நிகழ்வுகள், ஒட்டுமொத்த இந்தி யாவையும் சூடாக்கி இருக்கிறது என்பது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் சார்பில் பருத்தி சாகுபடி குறித்து விவசாயிகளுடன் கலந்தாலோசனைக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன்,எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீமற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தர்.

### எ.சீனிவாசன் தலைமை! இராமாபுரம் வ.செல்வகுமார் முன்னிலை! க.ராஜூ - ராதா செல்வம் வரவேற்புரை!

# மதுரவாயல் 155வது வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் தெருமுனைக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி – அமைச்சர் மா.சுப்பிரமணியன் – காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

*சென்னை, டிச. 25 -*

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 155 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் தெருமுனைக் கூட்டம் இன்று (25.12.2024 - புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, இராமாபுரம் செந்தமிழ் நகரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு எ.சீனிவாசன் தலைமை வகிக்கிறார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ. செல்வகுமார் முன்னிலை வகிக்கிறார்.

ஆ.ராதா செல்வம், க. ராஜூ ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில்

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமைக் கழகப் பேச்சாளர்கள் குமரி பிரபாகரன், ப.பவித்ரா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம், நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் துரை வீரமணி, எஸ்.அருணாசலம், செ.ரவி, வி.ராஜேஷ், ஏ.விஜயபாலா, சங்கர் கணேஷ், பி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.இரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ.மோசஸ், தி.சார்லஸ், செல்வி ரமேஷ், ஹேமலதா கணபதி, சாந்தி ராமலிங்கம், வட்டக் கழக நிர்வாகிகள் வ.சண்முகம், எம்.எல்.நாதன் ஜி.ராமகிருஷ்ணன், ஏ.டி.எத்திராஜன், எம்.மதன்ராஜ், பி. ரமேஷ், மூன்லைட் டி.ரவி, எஸ்.கர்ணன், ஜி.சேகர், ஈ.பிரகாசம், எஸ்.பூங்கொடி, எஸ். ஜெகதீசன், எஸ்.பூபாலன், மு.மகேஷ் குமார், எஸ். சேகர், ஈ.இளங்கோவன், செஞ்சி கார்த்திக், எஸ்.பரணி, எஸ்.டேவிட்ராஜ், அ.அப்புகுட்டி, எம்.ராஜ்பிரபாகரன், பி.பிரியா, ஆர்.லட்சுமி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், அணிகளின் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், இந்நாள் - முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதிப் பிரதிநிதி அ.மணி வண்ணன் நன்றி கூறுகிறார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா: வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில்

# 130 'அ' வட்டத்தில் 500 நபர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் கோவி.செழியன் – மயிலை த.வேலு – தமிழச்சி தங்கபாண்டியன் – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை வழங்குகின்றனர்

*சென்னை, டிச.25-*

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி 130 'அ' வட்டக் கழக சார்பில் தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (25-12-2024) மாலை 6.00 மணியளவில் வடபழனி அழகர் பெருமாள் கோவில் தெருவில் 500 நபர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டக்கழக செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில்,

ம.யூகலிங்கம், ஆர். கே.ஜெயமுருகேஷ், சாலி கே.மோகன், ஜெ.பாலு, பு. பத்மநாதன், சீ.தினகரன், த.செந்தில்குமார், அ.பொன்னுதுரை, பா.முஜிப், கார்த்திக் சந்திரகேசன், ஜி.ராமு, வடபழனி அலெக்ஸ், தி. ஆனந்தன், பி.வி.பிரபு, பா. ஸ்ரீனிவாசன், த.வெங்கடேசன், ச.பிரமோத் ராஜ்குமார் முன்னிலையில்

சிவசதிஷ், என்.லோகேஷ், திருமதி.ராணி, என். ஜி.ஒ.வேலு, டி.விஜயகுமார், ஓவியர் எஸ்.குமரன், அ.ஜான் பீட்டர், உமாகேஷ்வரன், வடபழனி எஸ்.சரவணன், ஏ.கார்த்திக்கேயன், எம். ஆனந்த்ராஜ், என்.எஸ்.மணிகண்டன், என்.ஜி.ஒ.கோபி, ப.சசிக்குமார், கா.யுவராஜ், பா.தினேஷ்குமார், திருமதி. கீர்த்திகா, சமீம்சேட் வரவேற்பில்

உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தியாகராயர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இதில் கோ.சு.மணி, எஸ். பாஸ்கர் எம்.சி., எஸ்.மோகன், திருமதி. பத்மபிரியா, டி. கமல், என்.எஸ்.பாலசுப்ரமணியன், ஆ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு.சத்யா, நந்தனம் வேதா, திருமதி எஸ். மலர், என்.அன்பழகன், எம். ஆறுமுகம், ஜெ.ஜானகிராமன், என்.ராமகிருஷ்ணன், பாபாசுரேஷ், க.சந்திரசேகர், சாந்திபங்காரு மு.மணி வண்ணன், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ்.ஜெனார்த்தன், எஸ்.புஷ்பா, ஜி.மோகன்ராஜ், ந.மோ.முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, பி.ஜெய்குமார், பி.மாரி, மு.ம.செந்தில்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், லலிதாபுரம் என்.துரை எஸ்.லட்சுமிகாந்தன், ராஜா அன்பழகன், கார்த்திகா பாஸ்கர், கோமதி மணிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 130'அ' வட்ட செயலாளர் தட்சன் ஹரிஹரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோ.ராதாகிருஷ்ணன், எஸ்.ரமேஷ், ஜெ.எஸ்.சினிவாசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# திருவாரூரில் விவசாயிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்பு!

*திருவாரூர், டிச.25*

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் பருத்தி சாகுபடி குறித்து விவசாயிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையா மங்கலம் ஜி.பாலு, மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் உடனிருந்தார்கள்.


இக்கூட்டத்தில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா தெரிவித்ததாவது :-

"முதலமைச்சர் அவர்கள். தொழிற்வளர்ச்சியில் கவனம் செலுத்தும் அதே வேளையில் ஒவ்வொரு முறையும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், தொழில் முதலீட்டாளர்கள் வருகையின்போது விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தினை பெருக்கும் வகையிலும், அவர்களின் வருமானத்தினை அதிகரிக்கும் வகையிலும் பல்வேறு புதிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி குறித்த வழிபாட்டுமுறை வழங்கப்பெற்றுள்ளது, இதனால் பருத்தி நல்ல முறையில் விளைச்சல் ஏற்பட்டு, விவசாயிகள் பயன்பெறுவார்கள். இம்முயற்சி வெற்றி பெறும்'' என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில்நகர்மன்ற துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு!
இன்று (25-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் -
நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு!



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 120வது | ICF எம்.சங்கர் வட்டக் கழக செயலாளர் | முத்தையா தெரு (நடேசன் தெரு அருகில்), திருவல்லிக்கேணி சென்னை5. | தக்கோலம் தேவபாலன் தலைமைக்கழக பேச்சாளர் யாசர் அராபத் தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணைதலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் பேரூர் திமுக சார்பில் மாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு. தமிழ் உதயன் தலைமையில் மீஞ்சூர் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 51– வது நினைவு அஞ்சலி முன்னிட்டு பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் கே.எஸ். சுப்பிரமணி, டாக்டர் கா.சு. ஜெகதீசன், ப.அலெக்சாண்டர், சீனிவாசன், சிவராமன், ராஜேந்திரன், கே.சசிகுமார், மணிமாறன், ஆ.பாளையம், வ.மோகன், வழக்கறிஞர் சு. கணேஷ், ஜோதி ஸ்ரீதர், சாமிவேல், நா.மோகன்ராஜ், ஜோதி முருகன், டி.எஸ். கதிரவன், காசி, இந்துஸ்தான் சீனிவாசன், தாஸ், புகழேந்தி, மில்லர், ஆவின் வெங்கடேசன், டி. எம்.சீனிவாசன், எழிலரசன், ராஜேஷ், சங்கர், திருப்பதி, சேகர், இளங்கோவன், வழக்கறிஞர் இளங்கோவன், யுவராஜ், ரவிச்சந்திரன், சிவராஜ், ஜோதி அக்கா, நாகரத்தினம், பாஸ்கர், மகிவர்மன், அஜய், சரவணன், ஆண்ட்ரூஸ், அண்ணாமலை, ஐயப்பன், திருநாவுக்கரசு, கதிர் (எ) ராஜா, குரு சாலமன், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில்

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் த.சிவராம் அறிக்கை!

*சென்னை,டிச,25,*

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி அமைப்பாளர் த.சிவராம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும்

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தி.மு.க. சட்டத்துறை ஆலோசனைக் கூட்டம் நாளை (26.12.2024 புதன்கிழமை) மாலை 5 மணிக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் கழக சட்டத் துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., ஆலோசனைப்படி நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபினேசர், மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, ஜி.சந்திர போஸ், என்.மருது கணேஷ், பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் எம்.டி.மதன்ராஜ், துணைத் தலைவர் ச.சேனாபதி, துணை அமைப்பாளர்கள் எஸ்.எம். டி.ரவிச்சந்திரன், எஸ்.சரவண குமார், எஸ்.சசிதரன், ஆர். ராஜன், சி.பாலமுருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் த.சிவராம் கேட்டுக்கொண்டுள்ளார்.



மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாளை முன்னிட்டு பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுபவீரபாண்டியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்த நிகழ்வில் வே.மதியழகன், த.ரமேஷ், செல்விரமேஷ் எம்.சி. ஏ4 மருத்துவமனை உரிமையாளர் டாக்டர் அருணா, டாக்டர் வி.லஷ்மி , பெல்ராஜன், எம். கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சுரேஷ்பாபு, தி.நா.கமலநாதன், எம்.குமார், திருமதி குப்புராஜேந்திரன், பி.எஸ்.துரைசாமி, எம்.முரளி, எஸ்.ஆறுமுகம், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், எஸ்.அமல்ராஜ், ஆர்.சிவலிங்கம், கே.சரவணன், எம்.ஏ.வி.சீனிவாசன், ஆர். விஜய், எம்.ஏ.வீரராகவன், கே.ஜி.ஜெய வேல், எம்.கே.தணிகாசலம், எஸ்.ரவி, சி.பாலமுருகன், பி.சேகர், எம்.கலாநிதி , ஆர். சந்திரகுமார், ஜி.கிருஷ்ணமூர்த்தி, ஏ.சுணேசன், ஆர்.எம்.பழனியப்பன், கே.ஆனந்த் கார்த்திக், புலவர் கருப்பையா, என்.ராஜா, எஸ்.கார்த்திக், என்.கிருஷ்ணன். இ.பவானி, ஆர்.வினோத், எஸ்.பரத்,எஸ்.பி.புஷ்பராஜ், த.மோகன்ராஜ், த.சித்ராதங்கராஜ், எஸ். சுந்தர்ராஜன், வி.ராஜேந்திரன், எஸ்.சுரேஷ்மோசஸ், எம்.அமுல்ராஜ், த.மோகனவேல், வி.டி.அரசு, பி.பொன்முத்து ரமேஷ், சி.சிவராமன், வி.ஹேமந்த்குமார், எஸ்.குகாந்த்குமார், கே.பிரதாபன், எம்.சின்னா, என்.ராஜா, ஜெ.அமுல்ராஜ், எஸ். சத்யநாராயணன், ஆர்.விஸ்வநாதன், என். உடையப்பன், என்.முருகேசன், பி.கிருஷ்ணன், பி.ராமஜெயம், ஜி.இ.சரவணன், வி.கார்த்திக், சத்தியநாராயணன், ஆர்.ஹரி, பி.செல்வகுமாரி, சுஜாதா நரசிம்மன், என்.கீதா, கிருஷ்டி, ஜெயந்தி, ஆர்.யாமினி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### இரா.ஆவுடையப்பன் - வி.ஜோசப் ராஜ் பங்கேற்பு! அம்பாசமுத்திரம் தொகுதி

# விக்கிரமசிங்கபுரம் நகர பாக முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## நகரச் செயலாளர் கி.கணேசன் வேண்டுகோள்!

*நெல்லை, டிச. 25-*

நெல்லை கிழக்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் நகர பாக முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தொகுதி பார்வையாளர் வி.ஜோசப் ராஜ் ஆகியோர்பங்கேற்றுஆலோசனை வழங்குகின்றனர்.

*28.12.2024 சனிக்கிழமை, மாலை 5 மணிக்கு, வார்டு எண். 10, 11, 13, பாகம் எண். 4, 6, 7, 8, 9, 10, டானா பந்தல் முருகன் இல்லத்திலும், 28.12.2024 சனிக்கிழமை, மாலை 6 மணிக்கு, வார்டு எண். 14, 15, பாகம் எண். 11, 12, 13, 14, கொட்டாரம், கலைஞர் படிப்பகம், 28.12.2024 சனிக்கிழமை, இரவு 7 மணிக்கு, வார்டு எண். 17, 19, 20, பாகம் எண். 15, 16, 33, 34, 35, 36, வைத்திலிங்கபுரம் தெரு, 28.12.2024 சனிக்கிழமை, இரவு 8 மணிக்கு, வார்டு எண். 7, 8, 16, பாகம் எண். 17, 18, 19, 20, 21, 22, 23, 24, பசுமை காமராஜர் திருமண மண்டபம்,*

*29.12.2024 ஞாயிற்றுக்கிழமை, மாலை 5 மணிக்கு, வார்டு எண். 5, 6, பாகம் எண். 25, 26, 27, 28, 29, சமுதாய நலக்கூடம் வடக்கு தெரு, 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை, மாலை 6 மணிக்கு, வார்டு எண். 1, 9, பாகம் எண். 44, 45, 46, 47, முதலியார்பட்டி, நவநீதன் இல்லம், 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை, இரவு 7 மணிக்கு, வார்டு எண். 3, 21, 2, பாகம் எண். 37, 38, 40, 41, 42, 43, 48, அம்பலவாணபுரம் மெயின் ரோடு, 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை, இரவு 8 மணிக்கு, வார்டு எண். 4, 18, பாகம் எண். 30, 31, 32, 39, கவுன்சிலர் செல்வகுமார் இல்லம்,*

*30.12.2024 திங்கட்கிழமை, மாலை 5 மணிக்கு, வார்டு எண். 12, பாகம் எண். 1, 2, 3, 5, லோயர் ஜெயராம் இல்லம்.*

மேற்கண்டவாறு கூட்டம் நடைபெறுகிறது என நகரச் செயலாளர் கி.கணேசன் தெரிவித்துள்ளார்.



சுமார் முப்பது ஆண்டுகள் போராட்டத்திற்கு பின் வேளச்சேரி 177 வது வார்டு ஜெகநாதபுரம் முதல் பிரதான சாலையில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்த வெளி நிலம் தனியாரிடமிருந்து மீட்கப்பட்டது. இதன் மதிப்பு ரூபாய்,15 கோடியாகும் இந்த நிலத்தை மீட்க உதவிய மாநகராட்சி அதிகாரிகளுக்கும்,177 வது வார்டு மாமன்ற உறுப்பினர், வேளச்சேரி பெ.மணிமாறனுக்கும் 177வது வார்டு பொதுமக்கள் நன்றியினை தெரிவித்துக்கொண்டனர்.